[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

II.—CALLING ATTENTION TO LOSSES INCURRED BY AGRICULTURISTS OF KANCHAMALAI, SALEM DISTRICT.

9-30 a.m. திரு. சோ. ஆறுமுகம் : கனம் சபாநாயகர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சேலம் மாவட்டம் கஞ்ச மலைப் பகுதியில் உருக்கு ஆலை துவக்குவதற்காக, அரசாங்க இதழில் அறிவிப்பு வெளியிடப் பட்டதையொட்டி, அப்பகுதியில் 22,000 ஏக்கரா நிலத்தை அரசாங்கம் எந்த நேரத்திலும் ஆர்ஜிதம் செய்யும் என்ற அச்சத்தால் அப்பகுதியைச் சேர்ந்த உழவர்கள் உரிய காலத்தில் பயிர் செய்யாமலும் கிணறுகளை ஆழப்படுத்தாமலும் இருந்த காரணத்தாலும் பருவ மழை தவறியதால் கடலை பயிரிடுவதில் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தின் காரணத்தாலும் அப்பகுதி உழவர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதையும், அதன் விளைவாக அப்பகுதி நிலங்கள் விஷயமாக நிலவரி வஜா அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது".

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, an extent of 15,875 acres in Salem taluk, Salem district has been notified for acquisition for the proposed establishment of Neyveli-Salem Steel Project. Twenty villages in Salem taluk are affected by this Project. Thre have been no reports of anybody abandoning cultivation in the area because of the proposed acquisition.

There has been very little rainfall in this district so far in the current agricultural season with the result that the condition of the standing crops is not very satisfactory. If the dry conditions prevail for another fortnight, there is great likelihood of the standing crops witherin away. The cultivation of groundnut and millets in areas where it has not already been commenced will be delayed considerably resulting in poor outturn. This is only the beginning of the fasli and if there are good rains in 2 or 3 weeks it will be possible for the farmers to raise groundnut and millets as usual. It is too early to predict the course of events to follow.

The agriculturists in these parts are even now given loans for deepening the existing wells and for purchase of bulls under the Agricultural Loans and Land Improvement Loans Act and for sinking new wells under the New Well Subsidy Scheme. Loans for the purchase of improved seeds, agricultural implements manure and pumpsets under the Hire Purchase Scheme are also being distributed.

I assure the hon. Member that if the present conditions continue to prevail and if there is failure of crops, the question of granting remission of land revenue, postponement of loan collection, etc., will be considered.

III.—STATEMENT BY MEMBER REGARDING CORRECTION OF A FIGURE QUOTED BY HIM IN HIS SPEECH.

திரு. ப. உ. சண்முகம்: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நான் பேசியபோது பேச்சு வேகத்தில் ஒரு சிறு தவறு ஏற்பட்டுவிட்டது. மத்திய சர்க்கார் போடுகின்ற வரியான 3,000 கோடி ரூபாயை 40 கோடி மக்கள் கொடுக்கும்போது தலைக்கு 750 ரூபாய் வருகிறது என்று தவறுதலாக, ரூபாய் 75 என்று சொல்வதற்குப் பதிலாகச் சொல்லிவிட்டேன். அது ரூபாய் 75 என்று இருக்கவேண்டும். பேச்சு வேகத்தில் அவ்வாறு 'ஸ்லிப்' ஆகி விட்டது. அதைத் திருத்த, ரூபாய் 75 என்று திருத்த, தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

கனம் சபாநாயகர்: சரி.

IV.—PRESENTATION OF REPORT.

REPORT OF COMMITTEE ON ESTIMATES ON WOMEN'S WELFARE DEPARTMENT.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : Sir, I rise to present the second report of the Committee on Estimates on the Women's Welfare Department.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS MEDICAL PRACTITIONERS BILL, 1965.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I beg leave to introduce the Madras Medical Practitioners' Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Medical Practitioners Bill, 1965".

The motion was put and carried and leave was granted.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் கனம் அவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சாதாரணமாக இந்த மன்றத்திலே அறிமுகப் படுத்துகிற, விவாதத்திற்கு வருகிற மசோதாக்கள் பற்றி இந்த மன்ற செயல் முறை பரிந்துரைக் குழு தீர்மானிக்கிறது. அந்தக் குழு 27-ம் தேதி கூடிய போது இப்படிப் பட்ட ஒரு மசோதா வரவிருக்கிறது என்ற தகவல் கொடுக்கப்படவில்லை. அதைக் கொண்டு வருவதற்கும், அனுமதிப்பதற்கும் உரிமை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அதே நோக்கில், 27-ம் தேதி சபை கூட இருக்கிறது என்கிற தகவல் இலாகாக்களுக்குத் தெரிந்த ஒன்றுதான். இருந்தும், இப்படிப் பட்ட மசோதாக்கள் எடுத்துக் கொள்ளப் பட இருக்கின்றன என்பதை முன்கூட்டியே அறிவித்திருந்தால் நலமாக இருக்கும். அப்படி பட்ட ஒழுங்கு முறை இருந்தால் நலமாக இருக்கும், என்கிற இந்த ஒழுங்குப் பிரச்சினையைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.